பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 22 செவ்வாய்க்கிழமை 07.09.2021 கதிர் 170

## ஊரடங்குச் சட்ட மீறல்; மேலும் 665 பேர் கைது

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 665 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

2

இராஜாங்க அமைச்சு, எம்.பி. பதவிகளை இராஜிநாமா செய்து

## மீண்டும் மத்திய வங்கி ஆளுநராக பதவியேற்கவுள்ள நிவார்ட் கப்ரால்



நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தனது அமைச்சுப் பதவியில் இருந்தும் மற்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீண்டும் மத்திய ஆளுநர் பதவியை ஏற்பதற்காகவே அவர் இவ்வாறு அமைச்சுப் பதவியில் இருந்த விலகுவதற்குத்

2

## மஹிந்த இத்தாலி பயணம்

### பாப்பரசரைச் சந்திக்கவும் ஏற்பாடு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அடுத்த வாரம் இத்தாலிக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இத்தாலி பொலொக்னா பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் மாநாடொன்றில் கலந்துகொள்ளச் செல்லும் பிரதமருடன், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸும் செல்லவுள்ளார்.

மேற்படி மாநாட்டின் பின்னர் வத்திக்கானுக்குச் செல்லவுள்ள பிரதமர்

2

# தேசியப்பட்டியல் ஊடாக சபைக்கு வருகின்றார் யோஷித்த ராஜபக்ஷ?

## 'மொட்டு' அணிக்குள் ஒரு தரப்பு கடும் எதிர்ப்பு

**நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்படவுள்ள நிலையில் அவரின் அந்த தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் பிரதமர் அலுவலக பிரதானி யோஷித்த ராஜபக்ஷவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட கோரிக்கையையடுத்தே அஜித் நிவார்ட் கப்ரால் தனது அமைச்சுப் பொறுப்பையும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் இராஜிநாமா செய்யவுள்ளார்.**

**எவ்வாறாயினும் பிரதமர் மஹிந்த ராஜாபக்ஷவின் இரண்டாவது**

2



## நுவரெலியாவில் யுவதி மாயம்; தேடுதல் வேட்டையில் எஸ்.ரி.எவ்.

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா தோட்டத்தின் 2ஆம் கட்டைப் பிரிவில் காணாமல்போயுள்ள 25 வயது தமிழ் யுவதியைத் தேடும் நடவடிக்கையில் விசேட அதிரடிப் படை களமிறக்கப்பட்டுள்ளது.

குறித்த யுவதி தனது பாட்டியுடன் காட்டுப்பகுதிக்கு, விறகு சேகரிப்பதற்குச் சென்றிருந்த நிலையிலேயே கடந்த 5 ஆம் திகதி திடீரென காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் குறித்த யுவதியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் 5ஆம் திகதி முறையிட்டுள்ளார்.

மாயமான யுவதி சிறிது காலம் புத்திசுயாதீனமற்று காணப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்று வந்துள்ளார் என யுவதியின் தந்தை பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

யுவதி காணாமல்போன பகுதியில் சில இடங்களில் இரத்தக்கறைகள் காணப்படுகின்றன எனவும், சிலவேளை யுவதியை சிறுத்தை தாக்கி இழுத்துச்

2

## சேலை ஊஞ்சலில் கழுத்து இறுகி சகோதரர்கள் முன் சிறுமி மரணம்

தெரணியகல - மாலிபொட பிரதேசத்தில் சிறுமி ஒருவர் சேலையில் கட்டப்பட்ட ஊஞ்சலில் விளையாடிக்கொண்டிருந்தபோது கழுத்து இறுகி உயிரிழந்துள்ளார்.

11 வயதுடைய கெனோரீடா டில்மினி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி தனது 09 மற்றும் 07 வயதுடைய சகோதரர்களுடன் படுக்கை அறையில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் விளையாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சிறுமியின் தந்தை தோட்டத்திலும், தாய் சமையல் அறையிலும் இருந்துள்ளனர்.

2

## தெஹிவளையில் வீடொன்றில் வைத்து ஏழு பெண்கள் கைது

தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீல் வீதியில் அமைந்துள்ள வீடொன்றைப் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது அவ்வீட்டில் பாலியல் தொழிலில் ஈடுபட்ட 7 பெண்களும், ஆண் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண்களில் இருவர் 23, 29 வயதான பாணந்துறை மற்றும்

2

## வடக்கில் கொரோனாச் சாவு உச்சம் கடந்த ஆறு நாள்களில் 75 பேர் காவு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் செப்டெம்பர் மாதத்தின் முதல் 6 நாள்களில் 75 பேர் கொரோனா வைரஸ் தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் வவுனியா மாவட்டத்தில் 29 பேரும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 27 பேரும் கடந்த 6 நாள்களில் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் நேற்று 11 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 5 பேரும், வவுனியா மாவட்டத்தில் 3 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரும் என 11 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் வடக்கு மாகாணத்தில் இதுவரை 488 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## மறு அறிவித்தல் வரைக்கும் ஒத்திவைக்கப்பட்ட பரீட்சை

2020 மற்றும் 2021 ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி யாண்டுப் பரீட்சை, மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நிலையைக் கருத்தில்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ.பூஜித தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் கலாசாலைகளின் இறுதியாண்டுப் பரீட்சையை எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 26ஆம் திகதி

2

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, தற்போது மத்திய வங்கி ஆளுநராகப் பணியாற்றும் டபிள்யூ. டி. லக்ஸ்மன் சர்வதேச நாணய நிதியத்தில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் மத்திய வங்கி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## மஹிந்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த, அங்கு புனித பாப்பரசரைச் சந்தித்து ஆசி பெறவுள்ளார்.

அதேபோல் இலங்கையில் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் பிரதமர் அங்கு பாப்பரசருக்கு விளக்கமளிக்கவுள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் முக்கிய பிரதிநிதிகளைப் பிரதமர் இந்த விஜயத்தின்போது சந்திப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பயணத்தை முடித்துக்கொண்டு அமைச்சர் பீரிஸ், நேரடியாக அமெரிக்கா சென்று ஐ.நா. பொதுச் சபை அமர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

பிரதமர் மஹிந்த நாடு திரும்பிய பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

## நுவரெலியாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, தேடுதல் வேட்டையில் விசேட அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

ஜெயபாலன் நிலானி என்ற யுவதியே இவ்வாறு விறகு தேடச் சென்ற நிலையில் காணாமல்போயுள்ளார்.

## மறு அறிவித்தல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை நடத்துவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்குச்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய, நாட்டில் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 66 ஆயிரத்து 668 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 69 வாகனங்களும் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசியப்பட்டியல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகன் யோஷித்த ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்கு ஆளும்கட்சிக்குள் ஒரு தரப்பால் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவின் வருகைக்காகத் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை இராஜிநாமா செய்த ஜயந்த கெட்டகொடவுக்கு மீண்டும் தேசியப்பட்டியல் எம்.பி. பதவியை வழங்க வேண்டும் என்று குறித்த தரப்பால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தெஹிவளையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், ஏனைய 5 பெண்களும் வெளிநாட்டினத்தவர்கள் எனவும் பொலிஸாரால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சேலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமையல் முடித்து சிறுவர்கள் விளையாடிய அறைக்கு தாயார் வந்தபோது அறையின் கதவு உள்ளே பூட்டப்பட்டிருந்ததால் யன்னல் வழியே தாய் உள்ளே பார்த்தார்.

இதன்போது தனது மூத்த மகள் ஊஞ்சலில் இறுகிய நிலையில் இருந்ததை அவதானித்து அயலவர்களின் உதவியுடன் சிறுமியை மீட்டு தெரணியகலை மருத்துவமனையில் சேர்த்தபோது சிறுமி உயிரிழந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரணியகலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்



**பொன்னாலையை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட**

## கோவிந்தபிள்ளை இராமச்சந்திரன்

**ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ் மத்திய பேரூந்து நிலையம், இலங்கைப் போக்குவரத்துச் சபை)**

பொன்னாலையை பிறப்பிடமாகவும், மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், யாழ் மத்திய பேரூந்து நிலையம், இலங்கைப் போக்குவரத்துச் சபை) அவர்கள் 06.09.2021 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தபிள்ளை - தெய்வானை தம்பதிகளின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னத்தங்கம் ஆகியோரின் மருமகனும், தேவமணியின் பாசமிகு கணவரும், அமரர் ராஜேஸ்வரி, சிவனேஸ்வரி, யோகேஸ்வரி, ஆகியோரின் சகோதரரும் வைத்தியகலாநிதி சுஜித்தா அகிலன் (தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), வைத்திய கலாநிதி யசித்தா அன்பழகன் (குயின் எலிசபெத் வைத்தியசாலை, கிங்ஸ்லின், பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலன் (பொறியியலாளர், உரிமையாளர் வசந்தம் பாமசி), அன்பழகன் (சிரேஷ்ட விரிவுரையாளர் CLC), ஆகியோரின் மாமனாரும், சஞ்சனா (UK), அவிரோன், பிரனேஷ் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 08.09.2021 கோம்பயன் மடல் இந்துமயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு -
077 9103594
076 588 7252
0044 7727177375




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆடை உற்பத்தி படுக்கும்

பொருளாதாரம் துவண்டு போய்க் கிடக்கும் நாட்டுக்கு கொஞ்சநஞ்சமாவது அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் வாய்ப்பாக இருப்பது ஆடை உற்பத்தி, ஏற்றுமதி துறைதான். ஆனால் அதுவும் இன்னும் எத்தனை நாளைக்கு என்பது தான் கேள்வி.

ஒருபுறம் நாட்டை அச்சுறுத்தும் கொரோனாப் பேரிடர். அதற்கு மத்தியிலும் அதிக 'றிஸ்க்' எடுத்து, இயன்றளவு முழுவீச்சில் இயங்கும் ஒரே துறை அதுதான். அப்படி இருந்தும் எதிர்பார்த்த அளவு உற்பத்தி ஏற்றுமதி இல்லை. உரிய இலக்கை அதை எட்டுமா என்பதுதான் இப்போதுள்ள முதல் கேள்வி.

தொழில் முயற்சியாளர்களின் தீவிர எத்தனத்தில் அது தாக்குப்பிடித்தாலும், அந்தத் தொழில் முயற்சி நாட்டில் தொடர்ந்து நின்று, நிலைத்து, நீடித்துத் தாக்குப்பிடிக்குமா, அதன் எதிர்காலம் எத்தகையது என்ற நம்பிக்கையீனத்தினால் அத்துறையில் புதிய முயற்சிகளுக்கான வாய்ப்பை யாரும் தேடுபவர்களாக இல்லை. ஏற்கனவே அதில் முதலீடு செய்தவர்களும் எவ்வளவு விரைவாக முதலுக்குரிய உரிய பலனை ஈட்டிக்கொண்டு, முதலையும் வேறு தரப்புகளுக்கு கையகப்படுத்திக் கொண்டு, தங்கள் கையைக் கடிக்காமல் கழறலாம் என்ற சிந்தனையில் தான் துடிக்கின்றனர்.

பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற கதைதான்.

அத்தகைய சந்தேகமான, பதற்றமான நிலைமையை ஏற்படுத்தி நிற்கின்றது அரசு. இதில் கையைப் பலமாக சுட்டுக் கொண்ட அனுபவம் பல தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்கனவே உண்டு. திரும்பவும் ஒருமுறை தங்களின் கையைப் புண்ணாக்கிக் கொள்ள யாரும் முயற்சிக்கமாட்டார்கள் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

ஆடை உற்பத்தி, ஏற்றுமதித் துறை இலங்கையில் நிமிர்ந்து நின்று அந்நிய செலவாணியை ஈட்டித் தருவதற்கு ஒரே காரணம் –பிரதான காரணம்– இலங்கையில் உற்பத்தியாகும் ஆடைகளைத் தங்கள் நாடுகளில் இறக்குமதி செய்வதற்கு வரி எதுவுமே விதிப்பதில்லை என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட சலுகைதான். அது மட்டும்தான் காரணம். அந்த வரிவிலக்கு சலுகையை இலங்கை உட்பட உலகின் 8 நாடுகளுக்கு மட்டும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சமூகம் வழங்கியிருக்கின்றன. அதில் வியட்நாமும் பங்களாதேஷும் அந்த வாய்ப்பை மிக உக்கிரமாகப் பயன்படுத்தி வருகின்றன எனத் தெரிகின்றது. 2010க்கும் 2019க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த திட்டம் மூலமான தமது ஏற்றுமதியை வியட்நாம் நான்கு மடங்கினாலும், பங்களாதேஷ் ஒன்றரை மடங்கினாலும் உயர்த்தி விட்டன.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை ஐரோப்பிய நாடுகளின் இந்த சலுகையை 2005 இல் பெற்று, நாட்டின் அப்போதைய அரசு பொறுப்பற்ற, எதேச்சாதிகாரமான நடவடிக்கைப் போக்குகள் காரணமாக 2010இல் அதை இழந்தது. அதனால் முதலீடு செய்த தொழில் முயற்சியாளர்கள் கையைச் சுட்டுக் கொண்டனர்.

பின்னர் 2015இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசு அளித்த, நீதி,நேர்மையான ஜனநாயக ஆட்சிமுறைக்கான உறுதிப்படுத்தலை அடுத்து அந்த சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் 2017 இல் மீண்டும் வழங்கியது. அந்த ஏற்றுமதிச் சலுகையை அத்துறை வசமாகப் பயன்படுத்திக் கொண்டு தன்னை மேம்படுத்தி உயர்த்த முயற்சிக்கையில், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, ராஜபக்ஷக்களின் கெடுபிடி எதேச்சாதிகார அரசு ஆட்சிக்கு வந்துவிட்டது. மறுபுறம் கொரோனாப் பேரிடரும் சூழ்ந்து இருக்கிறது. பேரிடர் நெருக்கடியிலிருந்து அத்துறை மீண்டாலும் இனவெறி ஆட்சிப் பீடத்தின் போக்கால் அந்த ஏற்றுமதி சலுகையை நாடு இழந்து, இத்துறை மீண்டும் கட்டையில் ஏறும் சூழல் நெருங்கி வருகின்றது. இதற்கான அபாயச் சங்கை ஐரோப்பிய ஒன்றியம் தனது தீர்மானமாக ஊதி, வெளிப்படையாகக் கொழும்பு ஆட்சிப் பீடத்திற்கு தெரிவித்துவிட்டது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக நாடு பரிபாலிக்கப்படுவதை உறுதி செய்தல் போன்ற மனித உரிமை விடயங்களில் சர்வதேச சமூகத்துக்குத் தான் வழங்கிய உறுதியை நிறைவேற்றாமல் உதாசீனம் செய்து, திமிருடன் நடக்கும் ராஜபக்ஷ அரசு அதன் விளைவாக – பரிசாக – இந்த சலுகையை இழப்பது உறுதி. அதனால் இந்த ஏற்றுமதி துறை கட்டையில் ஏறுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வாக விரைவில் அரங்கேறும். இந்தத் துரதிர்ஷ்டம் பெரும்பாலும் உறுதியாகி விட்டது என்பதுதான் வேதனைக்குரிய உண்மை.

## ஒரு கிலோ வெங்காயத்துக்கு இறக்குமதி செய்ய வரி 40 ரூபா

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கு 40 ரூபா இறக்குமதி வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பெரிய வெங்காயத்திற்கான தேசிய தேவை 2 லட்சத்து 90 மெற்றிக் தொன்னாகக் காணப்படும் நிலையில் தற்போது விவசாயிகளும் பெரிய வெங்காயத்தை அறுவடை செய்வதால் 2 மாதங்களில் 60 ஆயிரம் மெற்றிக் தொன் பெரிய வெங்காயம் சந்தைக்கு விநியோகிகப்படும்.

தற்போது அதை இறக்குமதி செய்தால் உள்நாட்டு விவசாயிகளுக்குப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதன் காரணமாக இந்த விடயம் நிதியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டு, 40 ரூபா இறக்குமதி வரி விதிக்கத் தீர்மானிக்கப்பட்டது எனக் கூறினார்.

உள்நாட்டு விவசாயிகளைப் பலப்படுத்தும் நோக்கிலேயே அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

எதிர்வரும் இரு மாதங்களுக்கு பெரிய வெங்காய செய்கையில் ஈடுப்பட்டுள்ள விவசாயிகளுக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படாது என்றும் அவர்களின் உற்பத்திக்கு சிறந்த விலை கிடைக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



## அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹர பகுதியில் சிறியளவில் நிலநடுக்கம்!

அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹர பகுதியில் சிறிய அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.38 மணியளவில் இவ்வாறு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தேசிய நில அளவை மற்றும் சுரங்கப் பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நில நடுக்கம் 2.4 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அந்தப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்த நிலநடுக்கம் காரணமாக சேதம் எதுவும் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்றில் இருந்து ஆயிரத்து 769 பேர் மேலும் குணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் ஆயிரத்து 769 பேர் பூரணமாக குணமடைந்து இன்று (செவ்வாய்க்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை 3 லட்சத்து 88 ஆயிரத்து 278 பேர் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை 4 லட்சத்து 65 ஆயிரத்து 949 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் 10 ஆயிரத்து 320 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மிலிந்த மொரகொட குறித்த செய்தியில் உண்மையில்லை!

### இந்திய உயர் தூதரகம்

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள மிலிந்த மொரகொட தொடர்பில் வெளியான செய்திகளில் உண்மையில்லை என இலங்கைக்கான இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக மிலிந்த மொரகொடவை இந்தியா ஏற்றுக்கொள்ளவில்லை என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

மிலிந்த மொரகொடவால் வழங்கப்பட்ட அறிமுகச் சான்று அறிக்கையை இந்தியா நிராகரித்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், இந்தச் செய்திகளில் உண்மையில்லை என இலங்கைக்கான இந்திய உயர் தூதரகம் தெரிவித்துள்ளது.

## பிரித்தானிய பவுண்ஸ்க்கு எதிராக வரலாறு காணாத வீழ்ச்சியில் ரூபா

பிரித்தானிய பவுண்ஸ்க்கு எதிராக வரலாறு காணாத வீழ்ச்சியை இலங்கை ரூபா பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்றைய தினம் வெளியிட்ட நாணய மாற்று விகிதத்துக்கமைய, இந்த விடயம் வெளியாகியுள்ளது.

கடந்த 2ஆம் திகதி முதல் இன்று வரையில் நாணயங்களுடன் ஒப்பீட்டளவில் இந்தத் தகவலை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஸ்டெர்லிங் பவுண்ஸ் ஒன்றின் விற்பனை விலை 298.69 ரூபாவாகக் காணப்பட்டது. எனினும் நேற்று அதன் பெறுமதி 317.47 ரூபாவாக அதிகரித்துள்ளதென மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று வீத அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை 273.52 ரூபாவுக்கு காணப்பட்ட யூரோ ஒன்றின் நேற்றைய விற்பனை விலை 273.52 ரூபாவாகவும் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 203 ரூபாவாகவும் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைப்பற்றப்பட்டது ஆப்கானின் பஞ்ஷீர்! பறக்கிறது தலிபான்களின் கொடி



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் வடகிழக்கே அமைந்துள்ள பஞ்ஷீர் பள்ளத்தாக்கையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இதனை நிரூபிக்கும் வகையில், நேற்று (திங்கட்கிழமை) தலிபான்கள், இப்பகுதியில் கொடியேற்றுவதைக் காட்டும் காணொலியொன்று வெளியாகியுள்ளது.

எனினும், தேசிய எதிர்ப்பு முன்னணி எனும் கிளர்ச்சிக் குழு, தாங்கள் முக்கியமான நிலைகள் அனைத்திலும் இன்னும் இருப்பதாகவும் தொடர்ந்து சண்டையிடுவோம் என்றும் தெரிவித்துள்ளது.

தேசிய அளவில் தலிபான்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராட வேண்டும் என்றும் அந்த அமைப்பின் தலைவர் அகமது மசூத் வலியுறுத்தியுள்ளார்.

மலைப் பாங்கான பிரதேசமான பஞ்ஷீர் பள்ளத்தாக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள மிகச்சிறிய மாகாணங்களில் ஒன்றாகும்.

அமெரிக்கா உட்பட மேற்குலகப் படைகள் பின் வாங்கத் தொடங்கி ஒரு சில வாரங்களிலேயே, தலிபான்கள் ஆப்கானிஸ்தானை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும், 1.5 –2.0 லட்சம் பேர் வாழும் பஞ்ஷீர் மாகாணம் மட்டும் தலிபான்களுக்கு எதிராக தொடர்ந்து போராடி வந்தது. தற்போது இந்த மாகாணத்தையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளோம் என அறிவித்துள்ளனர். 1980களில் ரஷ்யப் படைகளுக்கு எதிராகவும், 1990களில் தலிபான்களுக்கு எதிராகவும் தற்போதைய பஞ்ஷீர் போராளிகள் அமைப்பின் தற்போதைய தலைவர் அஹ்மத் மசூத்தின் தந்தை அஹ்மத் ா மசூத் போரிட்டவர் என்பது நினைவுகூரத்தக்கது. இந்த மாகாணப் படையில் முன்னாள் ஆப்கான் அரசப் படை வீரர்கள், உள்ளூர் ஆயுதமேந்திய வீரர்கள் இருக்கின்றனர்.

### தாய்வான் வானில் பறந்த சீனாவின் ஜெட்!

## மீண்டும் பதற்றம் ஆரம்பம்!

தாய்வான் வான் பரப்பில், சீன இராணுவ ஜெட் விமானங்கள் அத்துமீறி பறந்ததாக, தாய்வான் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை போர் விமானங்கள் மற்றும் அணுஆயுத திறன் கொண்ட விமானங்கள் உட்பட மொத்தம் 19 விமானங்கள் தங்களுடைய வான் பாது காப்பு மண்டலத்தில் பறந்தன என பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.



சீன விமானப்படையின் ஞாயிற்றுக்கிழமை பணியில் நான்கு எச்–6 ரக போர் விமானங்கள் தமது வான் பரப்பில் பறந்தன என தாய்வான் கூறியுள்ளது.

அந்த விமானங்கள் அணு ஆயுதங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகளை தாங்கிச் செல்லும் திறன் வாய்ந்தவை என்றும் தாய்வான் தெரிவித்துள்ளது.

அந்தத் தீவு அருகே சீனாவின் விமானப் படையின் தொடர்ச்சியான பணிகள் குறித்து தாய்வான் அரசாங்கம் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக புகார் தெரிவித்து வருகிறது.

தங்கள் வான் எல்லைக்குள் நுழைந்து வட்டமிட்டதாகவும், அவற்றை தங்களது விமானப் படை விரட்டியடித்ததாகவும் தாய்வான் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது. இருப்பினும் இது குறித்து சீனா தரப்பில் இதுவரை விளக்கம் அளிக்கப்படவில்லை.

கடந்த 1949ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுப் போரின்போது சீனாவும் தாய்வானும் பிரிந்தன. ஆனால், தாய்வான் தனது நாட்டின் ஒரு பகுதி என சீனா தொடர்ந்து கூறி வருகிறது. அதுமட்டுமின்றி, அவசியம் ஏற்பட்டால் தாய்வானை கைப்பற்ற படை பலத்தை பயன்படுத்தவும் தயங்க மாட்டோம் என சீனா மிரட்டி வருகிறது.

தாய்வானை தமது ஆளுகையின் ஒரு அங்கமாக சீனா கோரி வந்தாலும், அதை ஏற்காமல் தாய்வான் அரசாங்கம், சுயாதீனமாக செயற்பட்டு வருகிறது. மேலும், தாய்வான் தன்னை ஒரு இறையாண்மை கொண்ட நாடாகவும் பார்க்கிறது.



### கொரோனாவுக்கு மத்தியிலும் படிப்பு!

## பிரிட்டனின் நிலைமை இது

கொவிட் தொற்றுகள் அதிகரிக்கும் என்ற அச்சத்திற்கு மத்தியிலும், மில்லியன் கணக்கான மாணவர்கள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் உள்ள பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.

தொற்றுநோயைக் கட்டுப்படுத்த முன் கால கொவிட் சோதனை பயன்படுத்தப்படுகிறது. ஆனால் சமூக விலகல் மற்றும் முகக்கவசங்கள் பற்றிய விதிகள் நீக்கப்பட்டுவிட்டன.

இதுபோன்ற நடவடிக்கைகள் இல்லாமல் பாடசாலையில் தொற்றுகள் விரைவாக உயரும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர் மற்றும் ஆரோக்கியமான 12 முதல் 15 வயதுடையவர்களுக்கு தடுப்பூசிகளை நிபுணர்கள் பரிந்துரைக்கவில்லை.

அமைச்சர்கள் இயல்பு நிலைக்கு திரும்ப விரும்புகிறார்கள். ஆனால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மாணவர்கள் மத்தியில் கொவிட் தொற்றுகள் 30 மடங்கு அதிகம்.

ஓகஸ்ட் 28ஆம் திகதி முதல் வாரத்தில், ஐந்து முதல் 15 வயதுடையவர்களில் 100,000க்கு 300க்கும் மேற்பட்ட கொவிட் தொற்றுகள் இருந்தன. இது 2020ஆம் ஆண்டு அதே வாரத்தில் 100,000க்கு 10க்கும் குறைவாக இருந்தது.

தலைமை ஆசிரியர்கள் மிகவும் மென்மையான காலத்தை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் பாடசாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

## எத்தியோப்பியப் போராளிகள் மீது தாக்குதல்

### 5,600பேர் உயிரிழப்பு!

எத்தியோப்பியாவில் தனிநாடு கோரி போராடி வரும் டீக்ரே விடுதலைப் போராளிகள் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 5,600 போராளிகள் உயிரிழந்துள்ளனர் என எத்தியோப்பியாவின் மூத்த இராணுவத் தளபதி பாச்சா தெபெலீ கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், ‘இறந்தவர்கள் தவிர, 2,300 போராளிகள் காயமடைந்திருக்கின்றனர் எனவும், இரண்டாயிரம் பேர் பிடிபட்டிருக்கின்றனர் எனவும் கூறியுள்ளார். ஆனால், எந்த காலகட்டத்தில் இந்த உயிரிழப்புகள் நேரிட்டன என்று அவர் தெளிவுபடுத்தவில்லை.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவில் ‘டைக்ரேயன்ஸ்’ எனப்படும் சமூகத்தைச் சேர்ந்தபெரும்பாலானோர் வசித்து வரும் டைக்ரே மாகாணத்தை, டைக்ரே மக்கள் விடுதலை முன்னணிகட்சியினர் ஆட்சிசெய்துவருகின்றனர். இந்த பிரிவினர் 2018ஆம் ஆண்டுவரை எத்தியோப்பிய அரசாங்கத்தில் முக்கிய அங்கம் வகித்து வந்தனர்.

அமைதிக்கான நோபல் பரிசு வென்ற அபே அகமது பிரதமராக பதவியேற்றது முதல் மத்திய அரசாங்கத்துக்கும் டைக்ரே மாகாணத்தில் உள்ளவர்களுக்கும் இடையே மோதல்கள் நிலவி வந்தன.

டைக்ரே மாகாணத்தை எத்தியோப்பியாவில் இருந்து பிரித்து தனி நாடாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு டைக்ரே கிளர்ச்சியாளர்கள் குழுவும், டைக்ரே மக்கள் விடுதலை முன்னணி கட்சியும் செயற்பட்டு வருகின்றன.

இந்த மோதலின் உச்சமாக கடந்த நவம்பர் மாதம், டைக்ரே மாகாணத்தில் இருந்த டைக்ரேயன்ஸ் சமூகத்தின் இராணுவ பிரிவினர் எத்தியோப்பியாவின் மத்திய அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினர்.



இதனால் டைக்ரே மாகாணம் எத்தியோப்பிய மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்து பிரிந்தது. இதனையடுத்து இருதரப்புக்கும் இடையே மோதல் வெடித்தது. தற்போது பிராந்தியம் முழுமையாக அரசாங்க துருப்புகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

கூட்டாட்சி துருப்புக்கள் நவம்பர் 28ஆம் திகதி, டைக்ரேயின் தலைநகர் மெக்கெல்லைக் கைப்பற்றியது, இப்போது இப்பகுதியில் உள்ள முக்கிய நகரங்களைக் கட்டுப்படுத்துகிறது. அரசாங்கம் வெற்றியை அறிவித்த போதிலும், டைக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் (டிபிஎல்எஃப்) தலைவர்கள் மோதலை தொடருவோம் என கூறியுள்ளனர். இப்போது வடக்கு பிராந்தியமான டைக் ரேயில், உணவு, நீர் மற்றும் மருந்து பற்றாக்குறை நிலவுகின்றது. இந்த சண்டையால் பல பத்து லட்சம் பேர் பட்டினி கிடக்கும் சூழ்நிலை உருவாகியிருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. மூன்று தசாப்தங்களாக எத்தியோப்பியாவை ஆட்சி செய்த டைக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டாட்சி துருப்புக்களுக்கும் படையினருக்கும் இடையே நவம்பரில் தொடங்கிய போரினால், இதுவரை 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டமையுடன் 50,000 க்கும் மேற்பட்ட மக்கள் அண்டை நாடான சூடானுக்கு தப்பிச் சென்றுள்ளனர். அரசாங்கப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான இந்த சண்டையால் டைக்ரே பேரழிவிற்கு உள்ளாகியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கோவில்கள் முன் வைக்கப்படும் விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைக்க தமிழக அரசு நடவடிக்கை



திருப்பூரைச் சேர்ந்த இந்து முன்னேற்றக் கழகத் தலைவர் கோபிநாத் சென்னை உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு வருகின்றன எனவும், செப்டெம்பர் 10 ஆம் திகதி விநாயகர் சதுர்த்திக்கு சாலைகளில் சிலைகளை வைத்து வழிபட மக்கள் தயாராகி வருகிறார்கள் என்றும் விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டங்களின் காரணமாக கொரோனாப் பரவல் மீண்டும் ஏற்படாத வகையில், நிலையான செயல்பாட்டு விதிகளை வகுக்க வேண்டுமெனவும் கோரியிருந்தார்.

ஓகஸ்ட் 2 ஆம் திகதி தமிழ்நாட்டு அரசுக்கும், டி.ஜி.பிக்கும் மனுக்கள் கொடுத்தும், இதுவரை எந்த அறிவிப்பும் வரவில்லை என்றும், எனவே விநாயகர் சதுர்த்திக் கொண்டாட்டங்களுக்கான விதிகளை வகுக்கும்படி தமிழ்நாட்டு அரசுக்கும், டி.ஜி.பிக்கும் உத்தரவிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி சஞ்சிவ் பானர்ஜி மற்றும் செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கியஅமர்வுமுன்விசாரணைக்கு வந்தபோது, தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் சண்முக சுந்தரம் அரசுத் தரப்பிலான பதிலை நீதிமன்றுக்கு வழங்கினார்.

விநாயகர் சதுர்த்தியன்று பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு அனுப்பி உள்ளதாகவும், அதன் அடிப்படையில் பொது இடங்களில் இந்த ஆண்டும் கொண்டாட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லையென்றும் சிறிய கோவில்கள் திறந்திருக்க அனுமதிக்கப்பட்டு, வழிபட்ட மண் விநாயகர் சிலைகள், இந்து சமய அறநிலையதுறை அதிகாரிகளால் கொண்டு செல்லப்பட்டு நீர் நிலைகளில் கரைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பதிலை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கில் மேற்கொண்டு எந்த உத்தரவும் பிறப்பிக்க அவசியமில்லை எனத் தெரிவித்து வழக்கை நிறைவு செய்துள்ளனர்.



# பெரியாரின் பிறந்தநாள் சமூக நீதி நாளானது

சட்டப்பேரவையில் விதி எண் 110 இன் கீழ் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பில், இந்தியா முழுவதும் சமூக நீதி பரவ பெரியார் அளித்த அடித்தளமே காரணமாகும். பெரியாரின் செயல்கள் குறித்துப் பேசவேண்டுமென்றால் 10 நாள்கள் அவையை ஒத்திவைத்துவிட்டு உரையாற்றவேண்டும்.

யாரும் எழுதத் தயங்கியதை எழுதியவர், யாரும் பேசத் தயங்கியதைப் பேசியவர் பெரியார்.

இதனால் பெரியார் பிறந்த செப்டெம்பர் 17 ஆம் திகதி சமூக நீதி நாளாக அனுஷ்டிக்கப்படும். அன்றைய தினத்தில் அனைத்து அரசு அலுவலகங்களிலும் உறுதிமொழி எடுக்கப்படும்.

தமிழருக்கு எதிரான எல்லாவற்றையும் எதிரியாகக் கருத்தில் கொண்டு செயல்பட்டார் பெரியார். நாடாளுமன்றத்தின் வாசலுக்கே போகாத பெரியாரால்தான் இந்திய அரசியல் அமைப்பில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் இன்றைய எழுச்சிக்கு பெரியார் போட்ட விதைதான் காரணம். தந்தை பெரியாருக்கு நன்றி செலுத்தும் அடையாளமாக சமூக நீதி நாளைக் கொண்டாடுவோம், என தெரிவித்திருக்கிறார்.

# பணியாளர்கள் அமரலாம் வருகிறது சட்ட திருத்தம்




தமிழ்நாட்டில் கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் அமர்ந்திருந்து வேலை செய்யும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் அளித்துள்ள தகவலில், “மாநிலத்தில் உள்ள கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்கள் அவர்களது வேலை நேரம் முழுவதுமாக நிற்க வைக்கப்படுகின்றனர். அதன் விளைவாக பல வகையான உடல்நலக் கேடுகளுக்கு ஆளாகின்றனர். தங்களது வேலை நேரம் முழுவதும் தங்கள் பாதங்களிலேயே நிற்கும் வேலையாள்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு கடைகள் மற்றும் நிறுவனங்களின் அனைத்து வேலையாள்களுக்கும் இருக்கை வசதி வழங்குதல் அவசியம் என தமிழக அரசு கருது கிறது.

04.09.2019 அன்று நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில், வேலையாள்களுக்கு இருக்கை வசதி வழங்கும் பொருட்கூறானது முன்வைக்கப்பட்டது. அது குழுவின் உறுப்பினர்களால் ஒத்த கருத்துடன் ஏற்கப்பட்டது. எனவே, அரசானது மேற்சொன்ன நோக்கத்திற்காக 1947ஆம் ஆண்டின் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தினை தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது. இந்தச் சட்ட முன்வடிமானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது” எனத் தெரிவித்துள்ளார்.

# நீட் தேர்வு ஒத்திவைக்கப்படாது செப்டெம்பர் 12 நடந்தே தீரும்



இந்தியா முழுவதும் இந்த ஆண்டுக்கான இளங்கலை மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு செப்டெம்பர் 12 ஆம் திகதி நடைபெறும் என்று தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது. விண்ணப்பங்கள் அனுப்பும் பணி கடந்தஜுலை13ஆம்திகதிதொடங்கியது. மாணவர்களின் நலன் கருதி நீட் தேர்வு நடக்கும் நகரங்கள் எண்ணிக்கை 155 இருந்து 198 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் அனுப்புவது, விண்ணப்பங்களில் திருத்தங்கள் மேற்கொள்வது, விண்ணப்பக் கட்டணம் செலுத்துவது என அனைத்துப் பணிகளும் ஓகஸ்ட் 14ஆம் திகதியோடு முடிவடைந்துவிட்டன. தற்போது பரீட்சை மையங்களைத் தயார் செய்யும் பணிகள் தொடங்கிவிட்டன. இதனிடையே சி.பி.எஸ்.இ. தொடர்பான தேர்வுகளும் அடுத்தடுத்து நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டன. இதனால் நீட் தேர்வு எழுதுவதில் மாணவர்களுக்குக் குழப்பம் ஏற்படலாம் என்பதால், நீட் தேர்வை ஒத்திவைக்கக் கோரி சுப்ரீம்கோர்ட்டில் பல்வேறு தரப்பில் இருந்து வழக்குகள் தொடரப்பட்டன.

இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பாக நேற்று விசாரணை செய்த சுப்ரீம்கோர்ட், நீட் தேர்வை 16 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர்.

ஆனால், ஒருசில மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அதனை ஒத்திவைக்க முடியாது. இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம். திட்டமிட்டபடி நீட் தேர்வு நடந்தே தீரும். அதில் எவ்வித மாற்றமும் இருக்காது, என்று தெரிவித்து வழக்குகளைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.



# ஊழியருக்கு இருக்கை வசதி வழங்கும் சட்ட திருத்தம்! திரைப்பட இயக்குநர் வசந்தபாலன் அரசுக்கு நன்றி

தமிழ்நாட்டில் கடைகள் மற்றும் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு அமரும் வசதியை ஏற்படுத்தும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளதையடுத்து தமிழ்த் திரைப்பட இயக்குநர் வசந்தபாலன் ‘அங்காடித்தெரு திரைப்படத்தின் கனவு மெல்ல மெல்ல நிறைவேறுகிறது’என்று தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்.

துணிக்கடைகளில்பணிபுரியும்பணியாளர்களின் துயரத்தை ‘அங்காடித்தெரு’ படத்தின் மூலம் சினிமாவில் வெளிப்படுத்தி, விழிப்புணர்வையும் அவர்களின் வாழ்வையும் கண்முன் நிறுத்திய இயக்குநர் வசந்தபாலன், ‘தமிழக அரசுக்கு நன்றி. என் அங்காடித்தெரு திரைப்படத்தின் கனவு மெல்ல மெல்ல நிறைவேறுகிறது. அங்காடித் தெரு திரைப்படத்தில் தொடர்ந்து நின்று கொண்டே வேலை செய்வதால் கால்களில் ஏற்படக்கூடிய வெரிக்கோஸ் நோய் பற்றிக் கூறியிருந்தேன் உங்களுக்கு நினைவிருக்கலாம்’ என்று நெகிழ்ச்சியுடன் அவரது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருக்கிறார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை 55 கொரோனா மரணங்கள் பதிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் 2 பேர் உயிரிழந்ததுடன் 206 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி கண்டறியப்பட்டதையடுத்து மாவட்டத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 248 ஆக அதிகரித்துள்ளதாகவும் மட்டு சுகாதார பிரிவிலே அதிகமான 55 மரணம் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா. மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர் உட்பட இருவர் கடந்த 24 மணித்தியாலத்தில் உயிரிழந்ததையடுத்து மாவட்டத்தில் 248 ஆக உயிரிழப்பு அதிகரித்துள்ளது.



அதேவேளை களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50 பேருக்கும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 73 பேருக்கும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 30 பேர் உட்பட 206 பேருக்கு தொற்று உறுதி கண்டறியப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதி கூடியதாக 55 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 பேரும் இதுவரை மரணமடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் 7,959 கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன் கடந்த வாரத்தில் 1,414 பேருக்கும் தொற்று கண்டறியப்பட்டதுடன் நாளாந்தம் 200 மேற்பட்ட தொற்றாளர்களும் 5 மேற்பட்ட உயிரிழப்பும் இடம்பெறுகின்றதுடன் தொடர்ந்து 2,013 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன் இவர்களில் 1,600 பேர் வீடுகளில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர்.

மாவட்டத்தில் முதல் தடுப்பூசி 30 வயதுக்கு மேற்பட்ட 95 வீதமான 270,000 ஆயிரம் பேருக்கு ஏற்றப்பட்டதுடன் இரண்டாவது தடுப்பூசி 74 வீதமான 219,000 ஆயிரம் பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது

எனவே மக்கள் முதலில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுங்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி சமூக பெறுப்புடன் நடந்து கொண்டால் மாத்திரதே இந்த தொற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரமுடியும் என்றார்.




## கொரோனாவால் உயிரிழந்த ஊடகவியலாளர் பிரகாஸிற்கு மட்டக்களப்பில் நினைவஞ்சலி

கொரோனாத் தொற்றினால் உயிரிழந்த யாழ்ப்பாணம் கொடிகாமத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஸின் ஆத்மா சாந்தி வேண்டி நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் மட்டு ஊடக மையத்தில் பிரகாஸின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய தலைவர் பா.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சலி செலுத்தும் நிகழ்வில், ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டு உயிரிழந்த ஊடகவியலாளரின் திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி ஆத்மா சாந்தியடைய வேண்டி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

## மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் நேற்று போதைப்பொருள் வியாபாரி ஒருவர் கைது

மட்டக்களப்பு நகர் பகுதியிலுள்ள லொயிஸ் அவனியூ வீதியில் உள்ள வீடு ஒன்றில் போதைப்பொருள் வியாபாரி ஒருவரை 2 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் விசேட அதிரடிப்படையினர் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் கைது செய்து ஒப்படைத்துள்ளனர் என மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய சம்பவதினமான நேற்று பிற்பகல் குறித்த வீதியிலுள்ள வீட்டை விசேட அதிரடிப்படையினர் முற்றுகையிட்டபோது போதைப்பொருள் வியாபாரி ஒருசிறிய பெட்டி ஒன்றில் பொதி செய்யப்பட்டு விற்பனைக்காக வைத்திருந்த 2 கிராம் ஐஸ் போதைப்பொருளை மீட்டதுடன் அவரையும் கைது செய்தனர்.

இந்த நிலையில் பிரதான போதைப் பொருள் வியாபாரியான இவர் தனியார் பஸ் வண்டியில் நடத்துநராக கடமையாற்றி வருகிறார் எனவும், போதைப் பொருளை விற்பதற்காக பொதி செய்து ஆயத்தமாக இருந்த போது விசேட அதிரடிப்படையினரால் முற்றுகையிடப்பட்டு கைது செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் இவரை நீதி மன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரின் வீட்டை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவ புலனாய்வு பிரிவினர் களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படையினருடன் முற்றுகையிட்ட போது பிரதான வியாபாரியான இவரும் இவரது தாயாரும் தப்பி ஓடியுள்ள நிலையில் அங்கு 15 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் பொதி செய்யும் உபகரணங்களுடன் ஒருவரை கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 30 லீற்றர் கசிப்புடன் பெண் கைது

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் வீடு ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் 30 லீற்றர் கசிப்புடன் பெண் ஒருவரை நேற்று கைது செய்துள்ளனர் என மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய கொக்கட்டிச்சோலை பொலிஸார் குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றை நேற்று முற்றுகையிட்டனர். இதன் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 லீற்றர் கசிப்பை மீட்டதுடன் பெண் ஒருவரையும் கைது செய்தனர். அதேவேளை வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையில் நேற்று பெண் ஒருவரை கஞ்சாவுடன் வாழைச்சேனை பொலிஸார் கைது செய்தனர். இவ்வாறு இரு வெவ்வேறு சம்பவங்களில் கைது செய்யப்பட்டவர்களை அந்தந்த பொலிஸ் நிலைய பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## கோட்டமுனையில் தனிமையிலிருந்த 62 பேரில் 21 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு கோட்டமுனை பொது சுகாதாரப் பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 62 பேருக்கு நேற்று திங்கட்கிழமை பொதுச் சந்தை சதுக்கத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கோட்டமுனை பொதுச் சுகாதாரப்பரிசோதகர் மிதுன்ராஜ் தெரிவித்தார்.



குறித்த பகுதியில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள், உறவினர்கள் அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் மட்டக்களப்பு பொது சந்தை கட்டடப்பகுதிக்கு அழைத்துவரப்பட்ட 62 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் வீட்டிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகப் பிரிவுக்குட்பட்ட நல்லையா வீதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்தே இந்த சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் ஒரு அறையில் தங்கியிருந்த செல்வரெட்னம் குலேந்திரன் என்னும் 73 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள மதுபான விற்பனை நிலையத்தில் கணக்காளராக கடமையாற்றி வருகிறார் எனவும் ஊரடங்கு காரணமாக தொழிலுக்கு செல்லாத நிலையில் குறித்த நபர் நோய்வாய்ப்பட்டு மருத்துவ சிகிச்சையும் பெற்றுவந்த நிலையிலேயே கட்டிலில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி ஜீவரெட்னம் குறித்த மரணம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்ததுடன் சடலத்தினை பிரேத பரிசோதனைகளுக்கா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பணிப்புரை விடுத்தார்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# நான்காவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா





இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 157 ஓட்டங்களால் வெற்றிபெற்று ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் முன்னிலை அடைந்துள்ளது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 191 ஓட்டங்களை எடுத்தது. ஷர்துல் தாகூர் 57 ஓட்டங்களையும் விராட் கோலி 50 ஓட்டங்களையும் சேர்த்தனர். இங்கிலாந்து அணியின் கிறிஸ் வோக்ஸ் 4 விக்கெட்டுகளையும் ரொபின்சன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.


இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை விளையாடிய இங்கிலாந்து அணி 290 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஒலி பொப் 81 ஓட்டங்களையும் கிறிஸ் வோக்ஸ் 50 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுகளையும் பும்ரா மற்றும் ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் தாகூர் மற்றும் சிராஜ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து 99 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணி, 466 ஓட்டங்களைக் குவித்தது. ரோஹித் சர்மா 127 ஓட்டங்களையும் புஜாரா 61 ஓட்டங்களையும் தாகூர் 60 ஓட்டங்களையும் ரிஷப் பண்ட் 50 ஓட்டங்களையும்எடுத்தனர். இங்கிலாந்து அணியின் கிறிஸ் வோக்ஸ் 3 விக்கெட்டுகளையும் ரொபின்சன் மற்றும் மொயின் அலி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் 368 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, இந்திய அணி 157 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது. இங்கிலாந்தின் ஹசீப் ஹமீட் 63 ஓட்டங்களையும் ரொறி பர்ன்ஸ் 50 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இந்திய அணியின் உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுகளையும் பும்ரா, ஜடேஜா மற்றும் தாகூர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக வெளிநாட்டு மண்ணில் டெஸ்ட் போட்டியொன்றில் தனது முதலாவது சதத்தை அடித்த இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரோஹித் சர்மா தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

# பாகிஸ்தான் பயிற்சியாளர்கள் மிஸ்பா, யூனிஸ் விலகினார்கள்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து மிஸ்பா உல் ஹக்கும் வக்கார் யூனிஸும் திடீரென விலகியுள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரான மிஸ்பா உல் ஹக், கடந்த இரண்டு வருடங்களாக பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளராகப் பதவிவகித்துவந்தார். திடீரென இப்போது அந்தப் பதவியில் இருந்து விலகியுள்ள அவர், இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு தனது முடிவைக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அந்த அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளரான வக்கார் யூனிஸும் மிஸ்பா உல் ஹக்குடன் சேர்ந்து தானும் பதவியிலிருந்து விலகியுள்ளார். ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நெருங்கியுள்ள நிலையில் இருவரும் திடீரென்று பதவி விலகியிருக்கின்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த, இசாசான் மணி சமீபத்தில்தான் பதவி விலகினார். இதனையடுத்து கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக ரமீஸ் ராஜாவை பிரதமர் இம்ரான் கான் நியமித்ததால்தான் பயிற்சியாளர்கள் இருவரும் வெளியேறினர் எனக் கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் மிஸ் பாவின் பயிற்சி மற்றும் அவரது அணுகு முறை குறித்து வர்ணனையாளராகக் கடமை யாற்றிய ரமீஸ் ராஜா விமர்சித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டெஸ்டில் விரைவாக 100 விக்கெட்டுக்கள்

# கபில் தேவ் சாதனையை முறியடித்த பும்ரா




டெஸ்ட் கிரிக்கெட்டில் விரைவாக 100 விக்கெட்டுக்களை எடுத்த இந்திய வேகப்பந்துவீச்சாளர் என்ற சாதனையை ஜஸ்ப்ரித் பும்ரா படைத்துள்ளார்.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 4 ஆவது டெஸ்ட் போட்டிலண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. போட்டியின் இறுதி நாள் ஆட்டத்தின்போது இங்கிலாந்து அணியின் ஒலி போப்பை 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பும்ரா ஆட்டமிழக்கச் செய்து வெளியேற்றினார். இந்த விக்கெட்டுடன், டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை எடுத்த இந்திய வேகப் பந்துவீச்சாளர் என்ற பெருமையை பும்ரா பெற்றுள்ளார். இவர் 24 போட்டிகளில் இந்த இலக்கை எட்டியுள்ளார்.

இந்திய முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் 25 டெஸ்டுகளில் இந்தச் சாதனையைபடைத்திருந்த நிலையில், பும்ரா 24 டெஸ்டுகளில் இந்த மைல் கல்லை எட்டியுள்ளார். மூன்றாது இடத்தில் 28 டெஸ்ட் போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை எட்டிய இர்பான் பதான் உள்ளார். இந்தியாவின் சுழல் பந்து வீச்சாளர்களில் அஸ்வின், 18 போட்டிகளில் விரைவாக 100 விக்கெட்டுக்களை எடுத்து இந்திய சாதனையைத் தன்வசம் வைத்திருக்கிறார்.

சர்வதேச ரீதியில் இங்கிலாந்தின் லோமன் 1896 இல் 16 டெஸ்ட்களில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்தியதே சாதனையாக இருந்துவருகிறது. தற்போது விளையாடும் வீரர்களில் பாகிஸ்தானின் யசீர் ஷா 17 போட்டிகளில் இந்த இலக்கை எட்டி சர்வதேச ரீதியில் ஐந்தாமிடத்திலும், அஸ்வின் ஆறாமிடத்திலுமுள்ளனர்.



# ஆரம்பித்த சில நிமிடங்களில் கைவிடப்பட்ட ஆர்ஜென்டீனா – பிரேஸில் கால்பந்துப் போட்டி

பிரேஸில் மற்றும் ஆர்ஜென்டீனா அணிகளுக்கு இடையிலான பிஃபா உலகக்கிண்ண தகுதிகாண் சுற்றுத்தொடரின் போட்டி கொவிட்-19 விதிமுறை மீறல் காரணமாககைவிடப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

பிரேஸில் மற்றும் ஆர்ஜென்டீனா அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் இந்தப் போட்டி ஆரம்பமாகிய ஐந்து நிமிடங்களில் பிரேசிலின் சுகாதாரத்துறை அதிகாரிகள் குறுக்கிட்டு ஆட்டத்தை நிறுத்தியுள்ளனர். ஆர்ஜென்டீனா அணியின் மூன்று வீரர்கள், பிரேஸிலின் கொவிட்-19 விதிமுறைகளை மீறினர் என்று குற்றச்சாட்டப்பட்ட நிலையிலேயே அதிகாரிகள் மைதானத்தில் நுழைந்து போட்டியை நிறுத்தியுள்ளனர்.

மேற்குறித்த மூன்று வீரர்களுடன் மொத்தமாக 4 வீரர்கள், இங்கிலாந்திலிருந்து பிரேஸிலுக்கு வருகை தந்துள்ளனர்.

இங்கிலாந்தில் இருந்து வருகை தரும் வீரர்கள் கட்டாய தனிமைப்படுத்லை மேற்கொள்ள வேண்டும் என பிரேஸில் அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும், மேற்குறித்த வீரர்கள் இங்கிலாந்திலிருந்து தாம் வந்ததை மறைத்து போட்டியில் விளையாடுவதற்கு தயாராகினர் எனக் குற்றச்சாட்டப்பட்டது.

குறித்த வீரர்களின் பெயர்கள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாத போதும், இங்கிலாந்து பிறீமியர் லீக்கில் விளையாடிவரும் எமிலியானோ பியூண்டியா, எமிலியானோ மார்டினஸ், ஸியோவானி லோ செல்ஸோ மற்றும் கிறிஸ்டியன் ரெமேரியோ ஆகியோர் இவ்வாறு விதிமிறையை மீறியிருக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கைவிடப்பட்ட இந்தப்போட்டி மீண்டும்எப்போதுநடைபெறும்எனஅறிவிக்கப்படவில்லை. அதேநேரம், ஆர்ஜென்டீனா அணி, தங்களுடைய அடுத்த தகுதிகாண் போட்டியில், எதிர்வரும் 10 ஆம் திகதி பொலிவியா அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# மக்களின் அவலங்களை அரசியலாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார் டக்ளஸ்

மக்களின் அவலங்களை அரசியலாக்குவதும், அரசியலுக்காக மக்களை அவலங்களுக்கு உள்ளாக்குவதும் ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொரோனாவில் இருந்து மக்களைக் பாதுகாப்பதற்கு அரசியல் பேதங்களைக் கடந்து அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலில் அமுல்படுத்தப் பட்டுள்ள அவசரகால நிலை தொடர்பாக நாடாளுமன்றில்இடம்பெற்றவிவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது நாடு இன்று எமது ஒரு மௌன மான வன்முறைக்கு மோசமாக முகங் கொடுத்துள்ளது. மௌனமாகவே வருகின்ற நோயால் மௌனமாகவே மக் கள் உயிரிழந்து போகின்ற நிலை காணப்படுகின்றது.

இதனால் இறந்த உடலங்களை தூக்கிச் செல்வதற்கு கூட ஒருவரும் முன்வராத சூழ்நிலை உருவாகியுள்ளது. இத்தகைய நிலையில் குறித்த அனர்த்தத்தை கட்டுப்படுத்த நாட்டை முடக்குமாறு சுகாதார தரப்பினர் வலியுறுத்தி வருகின்றனர்.

மறுபுறம் முடக்கப்படுவதால் நாடு பாரிய பொருளாதாரத்தை இழக்கும் நிலை காணப்படுகின்றது என பொரு ளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். இந்த இரண்டுக்கும் நடுவில் மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக அல்லலுறும் நிலை நீடித்து வருகின்றது.

இந்த இரண்டு பக்க அடியிலிருந்தும் மக்களை பாதுகாக்கவே அரசாங்கம் பல்வேறு நலத் திட்டங்களை முன்னெ டுத்துவருகின்றது.

இந்நிலையில் எதிர்க்கட்சியினர் தமது சுயலாப அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் மனித குலத்தை பலியெடுத்துவரும் இந்த கொரோனா பெருந்தொற்றை இல்லாதொழிக்க உலக நாடுகள் தமக்கிடையே இருந்த அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட்டு உறுதி கொண்டுள்ளன.

அதுபோல இலங்கைத் தீவிலும் அனைத்துத் தரப்பினரும் தத்தமது சுயநலன்களிலிருந்து விடுபட்டு ஒன்று பட்டு எமது நாட்டிலிருந்து இந்த



பெருந்தொற்றை இல்லாதொழிக்க ஒன்றுபட வேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன்.

வளர்ந்த தேசங்களே இன்று இந்தப் பெருந்தொற்றால் ஆடிப்போயுள்ள நிலையில் வளர்ந்துவரும் எமது நாடான இலங்கைத் தீவு எம்மாத்திரம் என்ப தையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண் டும். அத்துடன் உலக நாடுகளின் தரவுகளுடன்ஒப்பிடுகையில்இலங்கைத் தீவின் கொரோனா அனர்த்தங்களின் பதிவுகள் குறைவாகவே உள்ளன.

இதற்குக் காரணம் நாட்டில் தற் போதுள்ள நிர்வாகத்திறன் என்றே கூறவேண்டும். இந்நேரம் வினைத்தி றன் அற்ற ஆட்சியொன்று இருந்திருந் தால் இன்றைய அவலங்களை விடவும் அதிகளவான அவலங்களை சந்தித்தி ருக்க நேரிட்டிருக்கும்.

அந்தவகையில் இந்தச் சூழலில் இருந்து நாம் மீண்டெழ வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தையும் நாம் மீண்டெழச் செய்ய வேண்டும்.

அந்நிலையில் மக்களின் அன்றாட உணவுப் பொருள்களை பதுக்கி வைத்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக ஒரு திட்டமிட்ட செயற்பாடுகள் நடந்தேறி வருகின்றன. இந்த துர்ப்பாக்கிய நிலை வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது.

இதைக் கட்டுப்படுத்தவே இந்த அவசரகாலச்சட்டம்கொண்டுவரப்பட்டது. அத்துடன் அரிசி, சீனி போன்ற பொருள் களுக்கு அதிகபட்ச நிர்ணய விலை கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் பதுக்கி வைக் கப்பட்டபலமாதங்களுக்குத்தேவையான உணவுப் பொருள்களும் மீட்கப்பட்டு மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனவே இன்றைய சூழ்நிலையிலி ருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அரசியல் பேதங்களைக் கடந்து அனைத் துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். -என்று அழைப்பு விடுத்தார்

## யாழில் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது

### அரச அதிபர் க.மகேசன் தெரிவிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் தொற்றாளர்களின் எண் ணிக்கை சற்று குறைவடைந் துள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்

தற்போது உள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




இதன்போது மேலும் தெரி வித்த அவர்-

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா நிலைமை கடந்த வாரத்துடன் ஒப்பிடு கையில் நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்ற போக்கு சற்று குறைவடைந்து காணப் படுகின்றது .

யாழில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 213 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது. மொத்தமாக 13 ஆயிரத்து 944 பேர் மாவட்டத்தில் இன்று வரை தொற் றாளர்களாக இனங்காணப்பட்டுள்ள னர்.

இறப்புக்களை பொறுத்தவரை 274 ஆக அதிகரித்துள்ளது அதேநேரம் 5,641 குடும்பங்கள்யாழில்தனிமைப்படுத்தலில் உள்ளன. - என அவர் மேலும் தெரி வித்தார்.

## கடற்படை பஸ்ஸுடன் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் சாவு

வவுனியா ஈரப்பெரிய குளத்தில் கடற்படை பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள் ளானதில் ஒருவர் பலி யாகியுள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இரவு இடம்பெற்ற விபத்து பற்றி மேலும் தெரியவரு வதாவது -


வவுனியாவிலிருந்து ஈரப்பெரியகுளம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஈரப்பெரியகுளம் சந்தியில் எதிரே வந்த கடற்படையின் பஸ்ஸுடன்மோதிவிபத்துக் குள்ளானதில், மோட்டார் சைக்கிள் சாரதி பலியாகி யுள்ளார்.

அனுஸ்க அபயரத்தின லக்மால் (வயது 28) என்ற இளைஞனே மரணமடைந்துள்ளவராவார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணை ஈரப்பெரியகுளம்



பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி சுகந்தன் தலைமையில் இடம்பெற்று வருகின்றது.





## மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, அவரது தாயார் இராசம்மா, அயலவர் கிருபாமூர்த்தி, தம்பி பிரணவன் ஆகியோர் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட செம்மணிப் படுகொலை - 25ஆவது ஆண்டு நினைவு நாள் 07.09.2021

- ★ பதினொரு இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவி கிருஷாந்தி.
- ★ தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை (GENOCIDE) உட்பட்ட குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் (INTERNATIONAL CRIMINAL COURT) நிறுத்துவோம்.
- ★ தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட குற்றங்களுக்காக ஈடு செய் நீதி (REMEDIAL JUSTICE)யை பெறக்கூடிய விதத்திலும், இனப்படுகொலை மீண்டும் இடம்பெறாமல் இருக்க மீள நிகழாமை (NON-RECURRENCE)யை உறுதிப்படுத்தக்கூடிய விதத்திலும், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாஷைகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும், வடக்கு – கிழக்கு மாநிலத்தில் பொதுசன வாக்கெடுப்பு (REFERENDUM) ஒன்றை நடாத்த முன்வருமாறு குவாட் (QUAD) அமைப்பை (இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் அடங்கியது) கோருகின்றோம்.
- ★ செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட எம் தமிழ் உறவுகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

**தமிழ்த் தேசியக் கட்சி (த.தே.க)** TAMIL NATIONAL PARTY (T.N.P)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.09.2021இல் வெளியிடப்பெற்றது.